## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 2-2 - திண்ணன்வீடு
**(எம்பெருமானுடைய பரத்வத்தை இதிஹாஸ புராண ப்ரக்ரியையாலே அவதாரத்திலே அனுஸந்தித்துப் பரோபதேசம் செய்தல்)**

2796 * திண்ணன் வீடு * முதல் முழுதுமாய் *
எண்ணின் மீதியன் * எம்பெருமான் **
மண்ணும் விண்ணும் எல்லாம் * உடன் உண்ட * நம்
கண்ணன் கண்ணல்லது * இல்லையோர் கண்ணே 1

2797 ஏபாவம்! பரமே! * ஏழுலகும் *
ஈபாவம் செய்து * அருளால் அளிப்பாரார்? **
மாபாவம் விட * அரற்குப் பிச்சை பெய் *
கோபால கோளரி * ஏறன்றியே 2

2798 ஏறனைப் பூவனைப் * பூமகள் தன்னை *
வேறின்றி விண்தொழத் * தன்னுள் வைத்து **
மேல்தன்னை மீதிட * நிமிர்ந்து மண்கொண்ட *
மால் தனில் மிக்கும் ஓர் * தேவும் உளதே? 3

2799 தேவும் எப்பொருளும் படைக்க *
பூவில் நான்முகனைப் படைத்த **
தேவன் எம்பெருமானுக்கு அல்லால் *
பூவும் பூசனையும் தகுமே? 4

2800 தகும் சீர்த் * தன் தனி முதலினுள்ளே *
மிகும் தேவும் * எப்பொருளும் படைக்க **
தகும் கோலத் * தாமரைக்கண்ணன் எம்மான் *
மிகும் சோதி * மேலறிவார் யவரே? 5

2801 யவரும் யாவையும் * எல்லாப் பொருளும் *
கவர்வின்றித் * தன்னுள் ஒடுங்க நின்ற **
பவர்கொள் ஞான * வெள்ளச் சுடர்மூர்த்தி *
அவர் எம்மாழி * அம்பள்ளியாரே 6

2802 பள்ளியாலிலை * ஏழுலகும் கொள்ளும் *
வள்ளல் * வல்வயிற்றுப் பெருமான் **
உள்ளுளார் அறிவார்? * அவன் தன் *
கள்ளமாய * மனக் கருத்தே 7

2803 கருத்தில் தேவும் * எல்லாப் பொருளும் *
வருத்தித்த * மாயப்பிரானை அன்றி ** ஆரே

திருத்தித் * திண்ணிலை மூவுலகும் * தம்முள்
இருத்திக் காக்கும் * இயல்வினரே 8

2804 காக்கும் இயல்வினன் * கண்ணபெருமான் *
சேர்க்கை செய்து * தன் உந்தியுள்ளே **
வாய்த்த திசைமுகன் * இந்திரன் வானவர் *
ஆக்கினான் * தெய்வ உலககுகளே 9

2805 கள்வா! எம்மையும் * ஏழுலகும் * நின்
உள்ளே தோற்றிய * இறைவ! என்று **
வெள்ளேறன் நான்முகன் * இந்திரன் வானவர் *
புள்ளூர்தி * கழல் பணிந்தேத்துவரே 10

2806 * ஏத்த ஏழுலகும் கொண்ட * கோலக்
கூத்தனை * குருகூர்ச் சடகோபன் சொல் **
வாய்த்த ஆயிரத்துள் * இவை பத்துடன் *
ஏத்த வல்லவர்க்கு * இல்லையோர் ஊனமே 11

**அடிவரவு:** திண்ணன் ஏபாவம் ஏறனை தேவும் தகும் யவரும்
பள்ளி கருத்தில் காக்கும் கள்வா ஏத்த ஊனில்